
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :31 July 2026*

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வரலாறு
# தொல்லியல்



# வரலாற்றுக்கு முற்பட்ட கால நவிரமலை

# *Prehistory of Naviramalai*

**இரா.மகாலெட்சுமி,** முனைவர்பட்ட ஆய்வு ஆய்வாளர் , கடல்சார் வரலாறு கடல்சார் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

*Mrs R.Mahalakshmi, Ph.D Research Scholar, Department of Maritime History and Marine Archaeology, Tamil University, Thanjavur.*

**முனைவர் சு.இராசவேலு,** பேராசிரியர் (ஓய்வு), நெறியாளர், கடல்சார் வரலாறு கடல்சார் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

*Dr. S. Rajavelu, Professor (Retired), Mentor, Department of Maritime History and Marine Archaeology, Tamil University, Thanjavur*

***Abstract***

*This paper examines the prehistoric archaeology of Naviramalai, identified with the present-day Javadi Hills spread across the districts of Tirupattur, Tiruvannamalai, and Vellore in Tamil Nadu. Literary references from the Sangam text Malaipadukadam and archaeological evidence together confirm the antiquity and cultural significance of this hill region. Field investigations conducted in the Pudur Nadu and adjoining hill areas reveal the presence of Neolithic, Megalithic, and Microlithic cultural remains. Neolithic polished stone axes, adzes, and evidence of tool-manufacturing sites indicate the existence of early agricultural communities in the region. Megalithic monuments such as dolmens, cists, cairn circles, and menhirs found across several villages reflect elaborate burial practices and ancestor worship traditions. Rock art discovered in cave shelters and boulder surfaces further illustrates the social and ritual life of prehistoric communities. Ethnographic traditions among the Malayali tribal people, who continue to worship Neolithic tools and megalithic structures, preserve traces of ancient cultural memories. The study demonstrates that the Javadi Hills possessed a continuous cultural occupation from prehistoric times onward and formed an important ecological and cultural landscape in northern Tamil Nadu for more than 4000 years.*

***Key word :*** *Naviramalai, Javadi Hills, Prehistoric Archaeology, Neolithic Culture, Megalithic Culture*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழகத்தின் திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் பரவியுள்ள இன்றைய ஜவ்வாது மலைத்தொடரே சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நவிரமலை என்பதை இக்கட்டுரை வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியல் நோக்கில் ஆராய்கிறது. சங்க இலக்கியமான மலைபடுகடாம் வழங்கும் செய்திகள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இம்மலைப்பகுதியின் தொன்மையையும் பண்பாட்டு சிறப்பையும் உறுதிப்படுத்துகின்றன. புதூர் நாடு மற்றும் அதனைச் சார்ந்த மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகள் மூலம் புதிய கற்காலம், பெருங்கற்காலம் மற்றும் இடைநுண்கற்கால பண்பாட்டு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. புதிய கற்காலத்தைச் சார்ந்த வழுவழுப்பான கற்கோடரிகள், வெட்டுக்கருவிகள் மற்றும் கருவி உற்பத்தி மையங்கள் இப்பகுதியில் தொடக்க வேளாண்மைச் சமூகங்கள் வாழ்ந்ததை வெளிப்படுத்துகின்றன. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கல்திட்டை, கல்பதுக்கை, கல்வட்டம், நெடுநிலைக்கல் போன்ற ஈமச்சின்னங்கள் முன்னோர் வழிபாடு மற்றும் இறப்புச் சடங்குகளை உணர்த்துகின்றன. குகைகள் மற்றும் பாறை மேற்பரப்புகளில் காணப்படும் பாறை ஓவியங்கள் தொல்பழங்கால மக்களின் சமூக மற்றும் சடங்கு வாழ்க்கையை வெளிக்கொணர்கின்றன. இன்றும் புதிய கற்கால கருவிகளையும் பெருங்கற்காலச் சின்னங்களையும் வழிபட்டு வரும் மலையாளி பழங்குடி மக்களின் மரபுகள் தொன்மையான பண்பாட்டு நினைவுகளைத் தக்க வைத்துள்ளன. ஜவ்வாது மலைப்பகுதி நான்காயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியான மனித வாழ்வையும் பண்பாட்டு வளர்ச்சியையும் கொண்ட முக்கியமான தொல்லியல் நிலப்பரப்பாக விளங்கியதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

**திறவுச்சொற்கள்:** நவிரமலை, ஜவ்வாது மலை, வரலாற்றுக்கு முந்தைய காலத் தொல்லியல், புதிய கற்காலப் பண்பாடு, பெருங்கற்காலப் பண்பாடு.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டின் இறுதி நூலான மலைபடுகடாம் என்னும் நூல் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கவுசிகனார் என்னும் புலவரால் பாடப்பெற்றது. இந்நூல் பல்குன்றக் கோட்டத்து செங்கன்மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் புகழ்ந்தும் அவன் ஆண்ட பகுதியின் இயற்கை வளத்தையும் மலைகளின் அழகையும் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. மொத்தம் 583 அடிகள் கொண்ட இந்நூல் குறிப்பிடும் பகுதி தமிழகத்தின் திருப்பத்தூர், திருவண்ணாமலை வேலூர் மாவட்டங்களின் பரவியுள்ள ஜவ்வாது மலைத்தொடர் பகுதியாகும் என்பதை பிற தொல்லியல் சான்றுகளும் உறுதி செய்கின்றன. நன்னன் செய் நன்னனின் தலைநகரமாக விளங்கிய செங்கன்மா என்பது இன்றைய செங்கம் பகுதியாகும். இப்பகுதியில் ஆண்டிப்பட்டி என்னும் ஊரில் கிடைத்த 108 ஈயக்காசுகளில் சேந்தன் எதிரன்

அதிரன் என்னும் பெயர் காணப்படுகிறது. எழுத்தமைதியில் இக்காசை நன்னனின் வழி வந்த பிற்கால மன்னன் அதிரன் என்பவர் வெளியிட்ட காசாக இருக்கக்கூடும். இவன் சேந்தன் என்பவரின் மகனாக இருக்கக்கூடும். இக்காசுகள் வெளியிட்ட காலம் பொ.ஆ.200 ஆக இருக்கலாம் என்பது இந்நாணயங்களின் எழுத்தமைதி மூலம் அறியலாம். எனவே மலைபடுகடாம் பொது ஆண்டின் தொடக்க காலத்தில் பாடல் பெற்ற நூலாக இருக்கக்கூடும். இந்நாணயம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டிப்பட்டி பகுதியிலும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழாய்வுகளை மேற்கொண்டது. இங்கு கிடைத்த அரும்பொருள்கள் சுடுமண் உருவங்கள் இப்பகுதி சங்க காலத்தில் மிகச் சிறந்த பகுதியாக விளங்கியுள்ளதை எடுத்துக் காட்டுகிறது. மேலும் செங்கத்தில் உள்ள ரிஷபேஸ்வரர் கோயில் சுவரில் 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று பாடல் வரியில் எழுதப்பட்டுள்ளது. அப்பாடல் கல்வெட்டு பின்வருமாறு

“ மூவண்டறை தார்மன்னர் மலைப்படைத் தென் மன்னரை
வெண்கண்ட திறற் காங்கேமன் கண்சிவப்ப பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சொரி
அலைகடாம் பாட்டுண்டது” (கல்வெட்டு இதழ், எண்-5,1975-76,ப.13)

பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பெற்ற இக்கல்வெட்டுப்பாடலில் இப்பகுதி தொன்மையான மலைபடுகடாம் பாடப் பெற்ற பகுதி என வியந்து குறிப்பிடுகின்றது. எனவே செங்கம் அதனைச் சார்ந்துள்ள மலைப்பகுதிகள் சங்க காலத்தில் மிகச் சிறப்பான பகுதிகளாக மலைவளமும் இயற்கை வளமும் பெற்றுத் திகழ்ந்திருந்தன என்பதை அறிய முடிகிறது. இதன் அடிப்படையில் செங்கம் கணவாய்க்கு வடக்கில் பரவியுள்ள திருப்பத்தூர் மலைப்பகுதிகளில் தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுகளின் மூலம் இப்பகுதியின் தொல்லியல் வரலாற்றை அறிய முடிகிறது. அவ்வகையில் நவிர மலை என்பது இன்றைய ஜவ்வாது மலைத்தொடர் பகுதியின் திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலைப் பகுதிகளில் பரவலாக உள்ள ஜவ்வாது மலைத்தொடர் பகுதியே என்பதும் தெளிவுற அறிய முடிகிறது.

**அமைவிடம்**

பழைய வடஆர்க்காடு மாவட்டத்தில் இருந்து பிரிந்த தற்போது திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் அமைந்துள்ளது. சுமார் 64 கி.மீ. நீளமும் 16 கி.மீ. அகலமும் கொண்ட இம்மலைத்தொடர் திருப்பத்தூர், செங்கம், போளூர், வேலூர் ஆகிய நான்கு வட்டாரங்களில் மேற்கிலிருந்து கிழக்காகப் பரவியுள்ளது. இம்மலைகளில் மலையாளிகள் (Malaiyali) எனப்படும் பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர். மலைகளில் வாழ்வதால் இவர்கள் மலையாளிகள் என வழங்கப்படுகின்றனர். காஞ்சிபுரத்தை பூர்விகமாகக் கொண்ட வேளாளர்களில் காரள வேளாளர் என்னும் பிரிவினர் வேளாண்மை பொருட்டு இப்பகுதியில்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு பரவி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களின் பூர்வீகம் காஞ்சிபுரம் என்றே இன்றளவும் கூறி வருகின்றனர். (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-8,1991,ப.692) இவர்களுடைய முதன்மைத் தொழில் வேளாண்மை. தோட்டப் பயிர்களை விளைவித்தல், பழவகைகளைப் பயிரிடுதல் முதலிய தொழில்களை பாரம்பரியமாக செய்துவருகின்றனர். பட்டுப்பூச்சி வளர்த்தல், கால்நடைகள், வேட்டையாடுதல் முதலியன இவர்களது துணைத் தொழில்களாகும். இன்றைய சமூக அமைப்புகளால் தற்பொழுது உள்ள மலையாளிகள் மிகுந்த அளவில் அரசுப் பணிகளில் உயர்ந்த பதவிகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

தற்பொழுது வாழும் மலையாளிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே வேளாண்மை பொருட்டு இம்மலைப்பகுதிகளில் குடியேறி இருத்தல் வேண்டும். திருப்பத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் வேளாண்மை புதிய கற்காலத்தின் தொடக்க காலத்திலேயே உருவாகியுள்ளதை திருப்பத்தூர் மாவட்டத்தில் பையம் பள்ளி என்னும் இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் உறுதி செய்கின்றார் அதன் அகழாய்வாளர் எஸ். ஆர்.ராவ். (சு.இராசவேலு, தொல்லியல் அகழாய்வுகள் 1995,ப.16) எனவே இப்பகுதி வேளாண்மை செய்வதற்கான ஏற்ற பகுதியாக இருந்தமையால் வேளாண்மை பொருட்டு குடியேற்றங்கள் அக்காலத்திலேயே மலைப்பகுதிகளில் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அவ்வகையில் இம்மலைத்தொடர்களில் புதிய கற்காலம் பெருங்கற்காலம் வரலாற்றுக் கால எச்சங்கள் பெருமளவில் கிடைக்கின்றன.

தொல்லியல் நோக்கில் ஜவ்வாது மலைப்பகுதியில் திருப்பத்தூர் ஒட்டிய புதூர்நாட்டு மலைப்பகுதிகளில் மேற்கொண்ட கள ஆய்வுகளின் மூலம் இப்பகுதியின் வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியலை வெளிக்கொணரும் நோக்கோடு இக்கட்டுரை அமைகிறது.

ஜவ்வாது மலை பற்றி தொல்லியல் பார்வையில் சில முன்னாய்வுகள் நடந்திருக்கின்றன. இராசமாணிக்கனார் 1970களில் பத்துப் பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில் ஜவ்வாது மலைகள் பற்றியும், சங்க காலத்தில் இருந்த நாடுகள், தொண்டை நாட்டு ஊர்கள் பற்றியும் குறிப்பிடும் போது ஜவ்வாது மலையினை ஆட்சி செய்த நன்னனது மலைநாடு பற்றி விவரித்துள்ளார். (மா.இராசமாணிக்கனார், பத்துப் பாடடு ஆராய்ச்சி, 2012) சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த முனைவர் குமார் என்பவர் இப்பகுதிகளில் கள ஆய்வுகளை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து இராஜன் 1997 ஆம் ஆண்டு *Archaeological Gazetteer of Tamilnadu* என்ற நூலில் ஜவ்வாது மலையில் உள்ள நெல்லிவாசல், புதூர் நாடு போன்ற இடங்களைக் குறித்து குறிப்பிட்டுள்ளார். இப்பகுதயில் புதிய கற்காலத்தைச் சார்ந்த கற்கோடரிகள், கல்லால் செய்யப்பட்ட வெட்டுக்கருவிகள் (Adzes) ஆகியவை இம்மலைப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. (K.Rajan. Archaeological Gazetteer of Tamilnadu,1997, p.250) மேலும் நெல்லிவாசல்நாட்டிற்கு வடக்கே சுமார் 5 கி.மீ.

தொலைவில் ஐவ்வாது மலைப்பகுதியில் புதூர் நாட்டுப் பகுதியில் இரும்புக்காலத்தைச் சார்ந்த கற்திட்டைகள் பல பரவலாகக் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வகை கற்பதுக்கைகள் பெட்டி போன்ற அமைப்புடையவை. தரையின் மேற்பகுதியிலேயே கற்பலகைகளையும் மூடுகற்களையும் வைத்து சிறிய வீடுகள் போன்று இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்டவை. *(Ibid,p.251)* மோகன் காந்தி என்பவர் **2022** ஆம் ஆண்டு சவ்வாது மலைவாழ் மக்களின் பண்பாட்டுத் தளங்கள் என்னும் நூலில் ஐவ்வாது மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வியல் பற்றி விவரிவான ஆய்வை செய்துள்ளார்.(க.மோகன் காந்தி, சவ்வாது மலைவாழ் மக்களின் பண்பாட்டுத் தளங்கள்,2022) கோவிந்தராஜ் 2023ஆம் ஆண்டு ஐவ்வாது மலையில் தொல்தமிழ்ப் பண்பாடு என்னும் தலைப்பில் ஐவ்வாது மலைப்பகுதியில் காணப்படுகின்ற தொல்லில் இடங்கள், நடுகல், நடுகல் கல்வெட்டுகள், இடைக்கால கல்வெட்டுகள், சமூக அமைப்பு, வேளாண்மை, மருத்துவ முறைகள் போன்றவை பற்றி ஆராய்ந்துள்ளார். (ரே.கோவிந்தராஜ், ஐவ்வாது மலையில் தொல்தமிழ்ப் பண்பாடு, 2023) மேற்குறித்த சில முன் ஆய்வுகள் இருந்தாலும் இம்மலைப் பகுதியில் ஏராளமான வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியல் இடங்கள் காணப்படுகின்றன. புதிய கற்காலம், பெருங்கற்காலம், இடைநுன்கற்கால போன்ற தொல் எச்சங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**புதிய கற்காலம்**

சேலம், தர்மபுரி மாவட்டங்களில் சேர்வராயன் மலைத் தொடரிலும், வாடார்க்காடு மாவட்டத்தில் சவ்வாது மலைப்பகுதிகளிலும் புதிய கற்காலக் கோடரிகள் ஏராளமாகத் கிடைக்கின்றன. பல இடங்களில் இக்கோடரிகள் அங்கு வாழும் மக்களால் மேற்பரப்புகளில் கண்டெடுக்கப்பட்டு அவற்றை தாம் வழிபடுகின்ற கோயில்களில் வைத்து வணங்கி வருகின்றனர். பசால்ட் எனப்படும் வழவழப்பான மூலக் கற்களை நன்றாக தேய்த்து அவற்றை கைக்கோடரிகளாக புதிய கற்கால மக்கள் நிலத்தைக் கீறவும் தோண்டவும் விலங்குகளை வேட்டையாடவும் பயன்படுத்தி உள்ளனர். மேலும் இக்கற்கருவிகளை புதிய கற்காலத்திற்குப் பின்னரும் இரும்புக்காலத்திலும் பயன்படுத்தி உள்ளனர்.

இக்கற்களை இப்பகுதி மக்கள் விண்ணிலிருந்து விழுகின்ற கற்களென்று நம்புகிறார்கள். எனவே இதனை வழிபாட்டு இடங்களில் வைத்து வணங்கி வருகின்றனர். என சென்ற நூற்றாண்டில் இவ்வட்டாரத்தில் இப்பகுதியில் கள ஆய்வுகள் மேற்கொண்ட நிலப்பொதியியல் அறிஞர் ராபர்ட்புரூஸ் புட் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறித்த வட தமிழ் நாட்டில் புதிய கற்கால இடங்கள் இருந்தது போலவே திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் பரவியுள்ள ஐவ்வாது மலைப் பகுதியில் பல இடங்களில் புதிய கற்காலக் கருவிகள் காணப்படுகின்றன. கள ஆய்வின் போது புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு, தென்மலை நாடு, நாச்சாமலை,

கூட்டாத்தூர், கீழ்சிலம்படி, கீழ்விளாமூச்சி, கீழ் காணாவூர், மேல்காணாவூர், புளியங்குப்பம், வாழைக்காடு, நெல்லிவாய் ஆகிய பகுதிகளில் புதிய கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஜவ்வாது மலைப்பகுதியல் வாழும் மலையாளி பழங்குடிகள் இப்புதிய கற்கால கற்காலக் கருவிளை மாரியம்மன், பிள்ளையார் என்ற பெயரில் வழிபடுகின்றனர். இவ்வழிபாடு கோவில், வீடுகளில் மட்டுமின்றி மலை மக்களின் நிலத்தில் உள்ள பலாமரம், ஆலமரம், அரசமரம் என மரங்களின் அருகில் வைத்து குலதெய்வங்களாகவும் வழிபட்டு வருக்கினறனர். புதிய கற்கால மக்கள் தங்களின் பயன்பாட்டிக்கு பயன்படுத்தபட்ட கருவிகள் உருவாக்கிய தொழிற்சாலை புங்கம்பட்டு நாடு அடுத்த கீழானூர் கிராமத்தில் நாச்சியம்மன் கோவிலுக்குக் கிழக்குத் திசையில் அமைந்திருந்ததை ஆய்வின் போது அறியமுடிந்தது. நீர் ஆதாரங்கள் அதிகமாக காணப்படும் இடங்களிலும் புதிய கற்கால கருவிகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. புதூர் நாடு அடுத்த கோம்பை கிராமத்திற்கு மேற்குத் திசையில் அமைந்துள்ள முருகன் கோவிலுக்குப் பின்புறத்தில் இருக்கும் பாறையில் ஏராளமான புதிய கற்கருவிகள் காணப்படுகின்றன. இதன் மூலம் புதிய கற்கால மக்கள் புதூர் நாடு மலைப்பகுதிகளிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் கனிசமான அளவு தங்களது வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

**பெருங்கற்காலம்**

பெருங்கற்களை பலகைகளாகச் செதுக்கி ஈமச் சின்னங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த காலத்தைப் பெருங்கற் காலம் என்று தொல்லியல் அறிஞர்கள் வரையறை செய்கின்றனர். இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது நினைவாகவோபெரிய கற்களைக்கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் குறித்து சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவ்வகையில் புதூர் நாட்டு மலைப்பகுதிகளில் பெருங்கற் சின்னங்கள் மலைகளின் உச்சிப்பகுதிகளில் காணப்படுகின்றனர். இதே காலகட்டத்தில் தமிழகத்தில் மருதம் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் ஈமச்சின்னங்களாக களிமண்ணால் செய்யப்பட்ட முதுமக்கள் தாழிகளை ஈமச் சின்னங்களாகப் பயன்படுத்தி உள்ளனர் தாழியில் இட்டுப் புதைக்கும் ஈமச் சின்னங்களையும் பண்பாட்டு அமைதி பல்வேறு வகையான ஈமச் சின்னங்கள் குறித்து சங்க இலக்கியங்கள் பெரிதும் பேசுகின்றன. இதன் தொடர்ச்சியாக நடுகல் வழிபாடும் தமிழகத்தில் நிலவியது.

இறந்தவர்களுக்கு நடப்படும் கல்லை நடுகல் எனத் தமிழ் இலக்கியங்கள் வழங்குகின்றன. பெருங்கற்கால ஈமச் சின்னங்களான கல்திட்டை, கல்பதுக்கை, கல்வட்டங்கள், ஈமத்தாழி, ஈமப்பேழை, நெடுங்கல் ஆகியவற்றின் இறுதி வளர்ச்சியே நடுகல் ஆகும். நடுகல்லில் பெயரும் பீடும் எழுதுதல் எழுத்துக்கள் தோன்றிய பின் வளர்ச்சி அடைந்தது. பெயரும் பீடும் எழுதியுள்ள நடுகற்கள் தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தில் புலிமான்கோம்பை, தாதப்பட்டி,

பொற்பனைக்கோட்டை ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் தமிழி எழுத்துக்கள் காணப்படினும் வீரனது உருவம் பொறிக்கப்படவில்லை. வீரன் போரிட்டு அம்பு தைத்து இறக்கும் காட்சி எழுத்து அற்றும் எழுத்துடனும் புடைப்புச் சிற்பங்களாக பல்லவர் காலத்தில் இருந்து (பொ.ஆ.5 ஆம் நூ) கிடைத்து வருகின்றன.

தமிழ் இலக்கியங்கள் இறந்துபட்டோரைக் குறிக்கும்போது 'கல்லாயினனே' எனச் சுட்டுகின்றன. கல்லாயினன் என்றால் இறந்துபட்டடான் என்று பொருள். அதோடு உற்றார் உறவினரால் ஈமக்கடன் அளிக்கப்பட்டான் ; தெய்வத்தன்மை பெற்றான் எனவும் பொருள் கொள்கின்றன.

பெருங்கற்காலப் பண்பாட்டை நேரடியாக இலக்கிய நோக்கில் ஆராய்ந்தால் பெருங்காடு (புறநானூறு.364:14) என்பதை புறநானூற்றுப்பாடல் ஈமக்காட்டையும், ஈமச்சின்னங்களையும் குறிப்பிடுகிறது. தொல்பழங்குடிகள் இனக்குழுச் சமூகமாக இருந்த பொழுது இவர்கள் இறப்புச் சடங்குகளில் ஈமச் சின்னங்களை நால்வகை நிலங்களில் கல்பதுக்கை (Slab Cist), மண்குவை (Barrow), கல்குவை (Cairn), கல்கிடை (Cairn Circle), குத்துக்கல் (Menhir) கல்வரிசை (Alignment), தொப்பிக்கல் ( Hood stone), குடைக்கல், குடைவரைத் தாழ்வறைகள் (Rock - Cut Caves), தாழி (Urn) என்று பல்வேறு வகையான ஈமச்சின்னங்களைப் பண்டைய தமிழர்கள் வழக்கில் கொண்டிருந்தனர். இனக்குழுச் சமூகம் நிலையான கட்டமைக்கப்பட்ட சமூக மாற்றத்திற்கு உட்படும் போது அச்சமூகத்தில் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கத்தினால் மக்களுடைய பண்பாட்டுக் கூறுகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அப்பொழுது மருதநிலச் சூழலுக்கு ஏற்றவாறு மக்கள் இறப்புச் சடங்குகளில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்குத் தாழிகளைப் பயன்படுத்தினர். மருத நிலம் அல்லாது குறிஞ்சி, முல்லை நிலங்களிலும் தாழிகளைப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. தாழிகள் மனித நாகரீக வளர்ச்சியிலிருந்து புதிய கற்காலத்திலிருந்து பெருங்கற்கால பண்பாட்டுப் நிலைக்கு மாற்ற வித்திட்டது. பெருங்கற்காலப் பண்பாடு பெருங்கற்கால இறுதிப் பகுதியிலும் சங்ககாலத்தின் தொடக்க காலத்திலும் மக்கள் அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர்.

**கற்பதுக்கை**

பெருங்கற்காலப் பண்பாட்டில் கற்பதுக்கை, கல்திட்டை என இருவகை ஈமச்சின்னங்கள் தென்னிந்தியாவில் காணப்படுகின்றன. கற்பதுக்கை தரை மட்டத்துக்கு கீழே மண்ணில் பெட்டி போன்ற அமைப்பில் புதைக்கப்பட்டிருக்கும். நிலத்தைச் சிறிதாகத் தோண்டி அக்குழியில் கற்பலகைகளைக் கீழே சாயா வண்ணம் 'ஸ்வஸ்திக்' அமைப்பில் நான்கு பக்கமும் நிறுத்தி உண்டாக்கப்படும் அறை கற்பதுக்கை ஆகும். இதில் பக்கத்திற்கு நான்கு பட்டைக் கற்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. (தமிழ்நாட்டு வரலாறு தொல்பழங்காலம்,1975,ப.203) கற்பதுக்கைகளின் உள்ளே ஈமப்பொருள்கள் வைக்கப்பட்டுத்

திறந்த மேல்பகுதி பெரிய பலகைக்கல் கொண்டு மூடப்பட்டு மண்கொண்டு மேடிட்டப்படும்.. இதனைச் சுற்றிக் கல்வட்டம் அமைக்கப்பட்டன. சங்கப் பாடல்களிலும் கற்பதுக்கை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. (புறநானூறு.3:21,264:1) கல்திட்டைப் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் இடம்பெறவில்லை இருப்பினும் பத்துப்பாட்டில் பட்டினப்பாலையில் (பட்டினபாலை.59,60) மட்டும் திட்டை என்ற சொல் இடம்பெறுகிறது. திட்டை என்பது மேடாகக் குறிப்பிடுகிறது. அம்மேடு ஈமச்சின்ன மேடாகக் கொள்ளவில்லை போர் பயிர்ச்சிபெறும் மேடு என்று கையாளப்படுகிறது. எனவே கற்பதுக்கை என சங்க காலத்தில் குறிக்கப்பெற்ற ஈம வகை மண்ணில் குழி தோண்டி கற்பலகைகளைக் கொண்டு வீடு போன்று அமைப்பதாகவும் அதனையே மேற்பரப்பில் கல் வீடுகள் போன்று வெளியில் தெரியுமாறு அமைக்கப்படுவதையும் குறிக்கும் சொல்லாக இருத்தல் வேண்டும். எனினும் தொல்லியளார் இவ்விரண்டையும் வேறுபடுத்தி கற்பதுக்கை, கல்திட்டை என குறிப்பிடுகின்றனர்.

**கல்திட்டை**

பண்டைய தமிழர்களிடையே இருந்த ஈமச்சின்ன வழிபாட்டு முறைகளில் கல்திட்டையும் ஒன்றாகும். கல்திட்டை பெரும்பாலும் தரை மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டிருக்கும். இயற்கையாகக் கிடைத்த பெரிய கற்களை நான்கு புறமும் நிறுத்தி, சதுரமாக அல்லது நீண்ட சதுரமாக ஓர் அறை உண்டாக்கப்பட்டது. பக்கத்திற்கு ஒரு கல், இரண்டு கல் அல்லது அதற்கு மேற்பட்டவையும் பயன்படுத்தப்பட்டுக் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் பற்றிய செய்திகள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் கல்திட்டை, பாறை என்ற சொல்லாட்சியைக் கொண்டு விளங்குகிறது. கொன்றை நிழலில் பரப்பி வைத்தார் போன்ற பாறை (மதுரைக்காஞ்சி.278) (கல்திட்டை) படுத்து வைத்தார் போன்ற பாறை (மலைப்படுகடாம்.15), வழியே செல்லாது அகன்ற பாறையில் கூடி (மலைப்படுகடாம்.276), கூர் கற்களையுடைய பாறை (மலைப்படுகடாம்.373) ஆகிய பாடல்கள் கல்திட்டை பற்றிக் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஜவ்வாது மலைப் பகுதிகளில் புங்கம்பட்டு நாடு கல்லாவூர் கிராமத்தில் சின்னவட்டானூர் சாலையின் கிழக்குப் பகுதியில் சின்ன அனுமன் வயல்பகுதியில் இத்தகைய கல்வட்டம் காணப்படுகிறது. அவ்விடத்திற்கு மேற்குத்திசையில் வீடு கட்டுவதற்காக மண் அகழ்ந்தபோது சாம்பல் பூத்த மண்பானை அக்கல் வட்டப் பகுதியில் கிடைக்கப்பெற்றதை அப்பகுதிவாழ் மக்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறே நம்மியம்பட்டு கிராமத்தில் உள்ள காளியம்மன் வழிபாட்டு தளத்தில் ஏராளமான கல்வட்டங்கள் காணப்படுகின்றன. மேலும் இக்கிராமத்தின் வடக்குதிசையில் ஊரான் ராமர் நிலத்திற்கு அருகில் கல்வட்டம் அமைந்திருக்கின்றது. இதனை பிள்ளையார் என்ற பெயரில் அப்பகுதி மக்கள் வழிபடுகின்றனர்.

இவ்விடத்தில் நாயக்கர் காலத்து இரண்டு நடுகற்கள் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மேற்கண்ட கல்வட்ட அமைப்புகள் மேல்பட்டு, புளியங்குப்பம், கீழ்காணாவூர் முதலான இடங்களில் காணப்படுகின்றன.

பெருங்கற்கால வகைகளில் கல்திட்டைகள் (Dolmen) ஜவ்வாதுமலைப் பகுதிகளில் கள ஆய்வில் ஏராளமாக பெருங்கற்கால சின்னங்கள் இருப்பதை கண்டறியமுடிந்தது. ஜமுனாமருதூர் அருகில் உள்ள கீழ்செப்பிலி, பெருமுட்டம், கீழச்சரணாங்குப்பம், புளியங்குப்பம், மலைக்கொல்லை, பதிமலை, கோட்டமலை, கீழ்குப்பனாவூர், மேல்குப்பனாவூர், பட்டறைக்காடு. (மேல்பட்டு, கோம்பை. அரும்பல்பட்டு உள்ளிட்ட பல இடங்களில் காணப்படுகின்றன. கீழ்செப்பிலி என்ற இடத்திலுள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் மூன்று வகைகளாக உள்ளன. முதல்வகைக் கல்லறை சிறிய கற்களை ஒன்றின் மீது ஒன்றை அடுக்கி ஒருபக்க நுழைவாயில் போன்று வாயில் விட்டு அதன்மேல் மூடுகல்லைக் கொண்டு மூடியுள்ளனர். இரண்டாவது வகைக் கல்லறை மூன்று பலகைக் கற்களைக்கொண்டு மூன்று பக்கங்களிலும் நிறுத்தி அதன் கிழக்குப்பக்கம், வாயில் போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது வகைக் கல்லறைகள் நான்கு பலகைக் கற்களைக் கொண்டு மூடியுள்ளனர். இதில் வாயில் பகுதி இல்லை. கிழக்குப் பக்கமுள்ள பலகைக்கல்லில் இடுதுளை அமைக்கப்பட்டுள்ளது.

ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலையாளி பழங்குடி மக்கள் இங்கு காணப்படுகின்ற கற்திட்டைகளை குள்ளர் குகைகள் என்றும் பாண்டவர்கள் குகைகள் என்றும் கூறுகின்றனர். மலைவாழ் மக்களின் முன்னோர்கள் இப்பகுதியில் குள்ள மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்றும் வேறுசிலர் பாண்டவர்கள் இம்மலைப் பகுதியில் ஒருகாலத்தில் வாழ்ந்தனர், அவர்கள் வாழ்ந்த வீடுகளே இவை எனக் கருதுகின்றனர். மாண்டவர் குகையே பாண்டவர் குகை அல்லது பாண்டவர் வீடு என தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இச்சின்னங்கள் வழக்கில் உள்ளன. சிலர் இராமயண காலத்தில் வாலியர்கள் இங்கு வாழ்ந்தார்கள்; (வாலி குரங்கு இனத்தவர்கள்) அவர்கள் உருவாக்கிய வீடுகள் என்னும் பொருளில் அதனை வாலியர் மேடு என்றும் அழைக்கின்றனர்.

ஜமுனாமருதூர் வட்டம் புலியூர் கிராமத்திற்கு அருகில் உள்ள பெருமுட்டம் என்னும் சிற்றூரின் காடுகளில் நூற்றுக்கணக்கான கற்திட்டைகள் காணப்படுகின்றன. அதேபோன்று மேல்பட்டு கிராமத்திற்கு அருகில் உள்ள வால்பாறை மற்றும் அதன் அடிவாரப் பகுதியான ஜொனை மடுவு ஆகிய பகுதிகளில் ஏராளமான கற்திட்டைகள் காணப்படுகின்றன. மேலும், புதூர் நாடு அடுத்த கோம்பை கிராமத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள பாறைகளிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட கற்திட்டைகள், காணப்படுகின்றன. புதூர்நாடு அடுத்த அரும்பல்பட்டு கிராமத்திற்கு அருகிலுள்ள சாமிப்பாறை என்ற பகுதியிலும் கற்திட்டைகளைக் காணமுடிகின்றது.

புதிய கற்காலத்தை தொடந்தும் பெருங்கற்கால மக்களின் வாழ்விடப் பகுதியிலிருந்து அதன் அருகாமையில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருப்பதை அறியமுடிகிறது. புதைவிடங்கள் பல ஜவ்வாது மலைப் பகுதியில் காணப்பட்டாலும். வாழ்விடப்பகுதியை அடையாளம் காணமுடியவில்லை. மலைகளின் மேல் குழி வெட்டி பதுக்கை அமைக்க இயலாத நிலையில் சவ்வாது மலைப்பகுதிகளில் பெரும்பாலும் கல்திட்டைகளே காணப்படுகின்றன.

**நெடுநிலைக் கல் (Menhir)**

நெடுநிலைக்கல் (Menhir) குத்துக்கல் என்றும் அழைக்கப்படும். பெருங்கற்கால காலம் முதலாகவே இறந்தோர்களுக்காக அமைக்கப்படும் நினைவுச்சின்னமாக நெடுங்கல் இருந்து வருகிறது. இவ்வகை ஈமச்சின்னமானது போரில் இறந்துபட்ட வீரனுக்காக எடுக்கபட்டுள்ளது. குறிப்பாக மாடுபிடிப் போரில் இறந்த வீரன் அல்லது தொறுப் பூசலில் ஈடுப்பட்ட வீரனுக்காக எடுக்கபட்ட நினைவுச்சின்னமாக இது விளங்குகிறது. பின்னாளில் இவை நடுகல் எடுக்கும் வழக்கமாக மறுவி வந்துள்ளதை முன்னரே கண்டோம். ஜவ்வாது மலைப்பகுதியில் நம்மியம்பட்டு கிராமத்தின் வடக்கில் அமைந்துள்ள காளியம்மன் வழிபாட்டுத் தளத்தில் குத்துக்கல் ஒன்று காணப்படுகிறது. மேலும் தென்மலைப் புலியூருக்கு அருகிலுள்ள சாளூர் கிராமத்தின் மாரியம்மன் கோவில் அருகிலும் இரண்டு குத்துக்கற்கள் அமைந்துள்ளன. இக்கற்களின் உயரம் 10 அடியாகும்; அகலம் 5 அடியாகும். இத்தகைய கல்லை மலையின மக்கள் யானைக் கட்டிக் கல்லென்று அழைத்து வருகின்றனர். அந்நெடுநிலைக்கல் பெருங்கற்கால பண்பாட்டின் ஒரு அங்கமாக இப்பகுதியில் காணப்படுவது சிறப்புக்குறியது.

**பாறை ஓவியங்கள் (Rock Art)**

தொன்மையான வாழ்விடங்களில் காணப்படும் பண்பாட்டுத் தடங்களில் பாறை ஓவியம் வாயிலாகத் தொல்பழங்காலச் சமூக நிலையை பற்றி அறியமுடிகின்றது. தமிழகத்தில் 1980 - க்கு பின்பே பாறை ஓவியங்கள் பற்றிய ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. இதுவரை சுமார் முப்பது இடங்களில் பாறை ஓவியங்களைக் கண்டறிந்துள்ளனர். (T.S.Sridhar, Rock Art of Tamil Nadu, 2005, p.13) இவை ஒருங்கணைந்த தென்னார்காடு, வடஆர்காடு, தருமபுரி, நீலகிரி, தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. பாறை ஓவியங்களில் வேட்டைக் காட்சிகள், மந்திரம், சடங்குகள், கால்நடை மேய்ப்பு, சில ஓவியங்களில் படகில் செல்லும் காட்சிகளும் காணப்படுகின்றன. பாறை ஓவியங்களின் வாயிலாகத் தமிழக நிலப்பகுதிகளில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனுடைய பண்பாட்டினையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் அறிய முடிகின்றது. தமிழகத்தில் காணப்படுகின்ற பாறை ஓவியங்கள் போல் பிரான்ஸ் நாட்டில் காணப்படுவதை ஸ்ரீதரன் அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.(Ibid,p.1)

ஜவ்வாது மலைப்பகுதியில் பட்டறைக்காடு என்னும் கிராமத்தின் வடதிசையில் ஓடும் ஆற்றுக்கு அருகிலுள்ள பாறைகளில் கோட்டோவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியத்தில் ஒருவர் அமர்ந்த நிலையில் தன் இரண்டு கைகளிலும் இரண்டு உருவங்களைப் பிடித்திருப்பதைப் போல் காணப்படுகின்றது. மேலும், கோவிலூர் மலைக்காடுகளில் உள்ள பாறைகளில் வெண்சாந்து நிறத்தில் 8 பாறை ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இங்குள்ள இரண்டு குகைத்தளங்களிலும் ஐந்துக்கும் மேற்பட்ட ஓவியங்கள் இருப்பதை திருவண்ணாமலை வரலாற்று ஆய்வு நடுவம் கண்டறிந்துள்ளது. (தி இந்து தமிழ் நாளிதழில்,22.01.2022) முதல் ஓவியத்தில் ஒருவரின் அலங்காரம் இடம்பெற்றுள்ளது. இரண்டாவது ஓவியம் மனித உருவமாகக் காணப்படுகிறது. அதில் கையை விரித்த நிலையில் இருப்பது போன்றும் மற்றொரு கையில் எதையோ வைத்திருப்பது போலவும் காணப்படுகிறது. மூன்றாவது உருவத்தில் ஒரு மனித உருவம் நீண்ட தலைப்பாகை கொண்ட தோற்றத்துடன் கையில் ஆயுதம் ஒன்றைத் தூக்கிக்கொண்டு நடந்து செல்வது போன்று உள்ளது. இப்பகுதியில் மலைகள் சூழ்ந்துள்ளமையாலும் காடுகள் சூழ்ந்துள்ளமையாலும் இன்னும் பல பாறை ஓவியங்கள் இம்மலைகளில் கிடைக்க வாய்ப்புள்ளன.

ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளபட்ட ஜவ்வாது மலைப்பகுதியில் வரலாற்றுக்கு முற்பட்ட கால பல தொல்லியல் இடங்கள் பல்வேறு காலக்கட்டங்களில் கண்டறிப்பட்டுள்ளன. அவற்றில் புதிய கற்காலத்தைச் செந்த வழுவழுப்பான கைக் கோடரிகள், பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கல்திட்டை, கல்பதுக்கை, நெடுநிலைக்கல் போன்ற ஈமச்சின்னங்கள், இடைநுண்கற்காலத்தை சேர்ந்த பாறை ஓவியங்கள் போன்ற தொல் எச்சங்கள் கள ஆய்வின் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. இத்தொல்லியல் எச்சங்கள் மூலமாக அக்கால மக்களின் தினசரி வாழ்க்கை முறையில் இருந்த பயன்பாட்டு பொருள்கள், இறப்பின் போது அடக்கம் செய்ய பயன்படுத்திய கல்லறைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. ஜவ்வாது மலைப்பகுதியில் 4000 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்தனர் என்றும் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றை தெரிந்து கொள்ள இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது. மேலும் தொடர்ச்சியாக நவிர மலை என வழங்கப்பட்ட ஜவ்வாது மலைப்பகுதியில் வரலாற்றுக் கால நடுகற்கள் கோயில்கள் பல இன்றளவும் இங்கு தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றது.

**நோக்கீட்டு நூல்கள்**

*Rajan.K., Archaeological Gazetteer of Tamilnadu, Mano Pathippakam, Thanjavur,1997*

*Sridhar.T.S., Rock Art of Tamil Nadu, State Department of Archaeology, Channai, 2005*

இராசமாணிக்கனார்.மா., பத்துப் பாடடு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, புது டெல்லி, 2012

இராசவேலு.சு., தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 1995

கல்வெட்டு இதழ் எண்-5, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை காலாண்டு இதழ் சென்னை,1975-76

கோவிந்தராஜ்.ரே., ஜவ்வாது மலையில் தொல்தமிழ்ப் பண்பாடு, மலர் புக்ஸ், சென்னை,2023

தமிழ்நாட்டு வரலாறு தொல்பழங்காலம், தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1975

தி இந்து தமிழ் நாளிதழில்,22.01.2022

பத்துப்பாட்டு(பகுதி-1,2),பொ.வே.சோமசுந்தரனார் உரை, கழகவெளியீடு, சென்னை,2008

புறநானூறு(பகுதி-1,2), ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, கழகவெளியீடு, சென்னை,1951(மு.ப),2007

மோகன் காந்தி.க., சவ்வாது மலைவாழ் மக்களின் பண்பாட்டுத் தளங்கள், பாரதி புக் ஹவுஸ், 2022

வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,1991

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com